# தேவ சமாதானம்

**சமாதானத்தை உண்டுபண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.**

சமாதானம் உலகளவில் மிக முக்கியமாக கருதப்படுகிறது. சமாதானத்துக்காக சாதனை செய்தவர்களுக்கு நோபல் சமாதான பரிசு வழங்கப்படுகிறது. மிகச் சிறந்ததாக கருதப்படுகிறது. தேவனுடன் ஒப்புரவாகும் போது நமக்கும் தேவனுக்கும் சமாதானம் உண்டாகிறது. பின்பு நமக்குள்ளாக சமாதானம் பின்பு பிறருடன் சமாதானமாக வாழ முடிகிறது.

**சமாதானத்துடன் கூடிய திட்டம் (வச.22-24) :** ரோமாபுரியிலுள்ள திருச்சபை விசுவாசிகளை பவுல் சந்திக்க ஆர்வம் கொண்டு திட்டம் வரைந்தார். அவர்களைக் கண்டு சமாதானத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பினார். அது போல நாமும் யாரையாகிலும் சந்திப்பதற்கு எடுக்கும் திட்டம் சமாதானத்துக்கு ஆனவையாக இருக்க வேண்டும்.

**சமாதானத்துடன் கூடிய சகாயம் (வச.25-28) :** ஆண்டவரின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு சுவிசேஷ ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. முதலாம் நூற்றாண்டில் தோமா அப்போஸ்தலர் இந்தியாவுக்கு வந்து சுவிசேஷத்தை அறிவித்தார். அன்று முதல் இந்நாள் மட்டும் சுவிசேஷம் பலமுறைகளில் நடந்து வருகிறது. 1 கொரி.9:14ல் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களின் பிழைப்புக்கடுத்த காரியங்கள் கவனிக்கப்பட வேண்டும். திருச்சபையில் உள்ள வசதி குறைந்த மக்கள் மற்றும் தேவையிலிருக்கும் மக்களுக்கு உதவிச் செய்வது கிறிஸ்தவனின் கடமையாகும். 2 கொரி.9:12-15ல் நாம் செய்யும் சகாயத்தினால் நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டு அநேகர் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள். விசுவாச குடும்பத்தாருக்கு நன்மை செய்யக்கடவோம். இவைகளை செய்ய நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் (கலா.6:10).

**சமாதானத்துக்கான ஜெபம் (வச.29-33) :** நாம் செய்யும் உதவி தற்புகழ்ச்சிக்காகவும் அல்ல தாழ்வு மனப்பான்மை உண்டாக்குவதற்காகவும் அல்ல. அவர்கள் நாம் செய்யும் உதவியை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ள ஜெபிக்க வேண்டும். அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்பட ஜெபத்தில் ஒருவரையொருவர் தாங்க வேண்டும். உலகத்திலும், திருச்சபையிலும் குடும்பத்திலும், தேசத்திலும் சமாதானம் உண்டாக ஜெபிக்க வேண்டும். இன்று அநேகருடைய தனி வாழ்வில், குடும்ப வாழ்வில் சமாதானம் இல்லை. நமது வாழ்விலும் குடும்பத்திலும் சமாதானம் உள்ளதா? ஜெபிப்போம்!

**ஆண்டவரே, சமாதானத்தை விரும்பவும், சமாதானமாய் வாழவும் உதவி செய்யும். ஆமென்.**